**வாடகை கட்டுப்பாட்டு மேல்முறையீட்டு நீதிமன்றம்**
**(முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை)**
**முன்னிலை:– திருமதி.பி.சுதா, பி.காம். , பி.எல்.,**
வாடகை கட்டுப்பாட்டு நீதிபதி (முதன்மை சார்பு நீதிபதி)
திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மார்கழி மாதம் 03 ஆம் நாள்
2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் நாள் வியாழக்கிழமை._
**வழக்கிடை விண்ணப்ப எண். 03/2024**
**வாடகை கட்டுப்பாட்டு மேல்முறையீட்டு வழக்கு எண்.3/2022**

1. முத்துராமன்.
2. ஜியாவுதீன் (இறந்தவர்) ... மனுதாரர் /எதிர்மேல்முறையீட்டாளர்.

//எதிர்//

அப்துல் மாலிக். ... எதிர்மனுதாரர்/மேல்முறையீட்டாளர்.

இம்மனு 18.12.2025 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது, மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.ஏ.அப்துல்ஹாதி, அவர்களும், எதிர்மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.கே.சங்கரன், அவர்களும் ஆஜராகி இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உ த் த ர வு**

வாடகை கட்டுப்பாட்டு அதிகாரி நீதிமன்றம் in RCOPNo.4/2019 ல் I.A.4/2019–ன் ஆவணங்களில் சான்றிட்ட நகலையும், I.A.8/2021 லும் நீதிமன்ற அனுமதியோடு R.C.A. No.3/2022 ல் தருவிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கூடுதல் சான்றாவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**2. பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம் பின்வருமாறு :–**

இம்மனுவின் மனுதாரர், மேல்முறையீட்டு மனுவில் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆவார். அசல் மனு RCOP 4/2019 அப்துல் மாலிக் அவர்களால் ஜியாவுதீன் அவர்களுக்கு எதிராக தொடரப்பட்டு அதில் ஜியாவுதீன் I.A. 2/2019 ல் மனு தாக்கல் செய்து வாடகை பாக்கியை நீதிமன்றத்தில் செலுத்தி வைக்க வேண்டும் என கோரியிருந்தார். அம்மனு நிலுவையில் இருந்தபோது 04.06.2019 ல் ஜியாவுதீன் காலமாகிவிட்டார். மனுதாரர் ஜியாவுதீன் அவர்களின் தகப்பனார் ஜமால் முகம்மது அவர்களால் நடத்தி வரப்பட்ட S.A ஜமால் சைக்கிள் மார்ட்–ல் தன்னுடைய 13 வது வயதுமுதல் அவருடன் இணைந்து பணியாற்றி ஜமால் முகம்மது அவர்கள் காலமான பின்னர் அவர் குமாரர் ஜியாவுதீன் அவர்களுடன் தொழிலில் இணைந்து



SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2025.12.18 19:07:57 +0530

நடத்தி வருகிறார். எனவே மனுதாரரை SA ஜமால் சைக்கிள் மார்ட்டில் Associated with the Business ஆக இருந்து வருவதால் தன்னை Legal Representative ஆக சேர்க்க வேண்டும் என அனுமதி வேண்டி I.A.5/2019 மனுத்தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் மீது அப்துல் மாலிக் மேல்முறையீடு RCA 3/2022 ன் படி தொடர்ந்துள்ளார். ஆகவே மனுதாரரின் தரப்பில் RCOP 4/2019 ல் I.A. 4/2019 லும், I.A.8/2021 லும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன, அவைகளில் நீதிமன்ற அனுமதியுடன் சமூகம் நீதிமன்றத்திற்கு தருவிக்கப்பட்டுள்ளன. அதன் ஆவணங்களை RCA 3/2022 ல் கூடுதல் சான்றாவணங்களாக எடுத்துக்கொள்ள வேண்டி இம்மனுவை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

இம்மனு உரிய முறையில், உரிய நபரால், உரிய காலவரையரைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை. மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி கேட்டுள்ள கோரிக்கை ஏற்கக்கூடியதில்லை. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் ஆவணங்களை குறியீடு செய்யாததற்கு எந்த காரணமும் தெரிவிக்கவில்லை. எனவே மேற்படி ஆவணங்கள் மேல்முறையீட்டில் குறியீடு செய்யக்கூடியதில்லை. மனுதாரர் இந்த மேல்முறையீட்டு நடவடிக்கையினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் இறந்துவிட்ட ஜியாவுதீனுடன் Associated with the business ஆக இருந்தார் என சொல்லியுள்ளது உண்மையல்ல. அவ்வாறு அவர் இருந்திருந்தால் அதன் விபரத்தினை ஏற்கனவே தெரிவித்திருப்பார். எனவே இம்மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் எனக்கூறி தனது எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4. மனுவின் தீர்வுக்குரிய பிரச்சினையே :-**

மனுதாரருக்கு அவர் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. பிரச்சினைக்கான தீர்வு**

மனுதாரர் தரப்பில் I.A.5/2019 ல் மனுதாரரை சட்டப்படியான பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் SA ஜமால் சைக்கிள் மார்ட் தொழிலை இணைந்து நடத்தி வருவதற்காக 8 ஆவணங்களும் தொடர்ந்து சைக்கிள் மார்ட் நடத்தி வந்ததற்கான ஆதாரமாக RCOP 4/2019 in I.A. 4/2019 ல் 8 ஆவணங்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2025.12.18 19:08:05 +0530

ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது ஏற்க கூடியது அல்ல என்றும், இவ்வழக்கினை காலதாமதப்படுத்துவதற்காக கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், ஜியாவுதீனுடன் இணைந்து தொழில் செய்து இருந்தால் அதை ஏற்கனவே தெரிவித்திருப்பார் என்றும், தற்போது பொய்யான விபரங்களுடன் தாக்கல் செய்திருப்பதாகவும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பிலிருந்தும் வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் I.A.5/2019 மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்கின் ஆவணங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது . இறந்த ஜியாவுதீனின் சட்டபிரதிநிதியாகவும், அவருடன் இணைந்து தொழில் செய்தவராகவும் மனுதாரரை அங்கீகரிக்கப்படக்கூடியவரா அல்லது இல்லையா என்பதை பற்றி அசல் மேல்முறையீட்டில் தான தீர்மானிக்க முடியும். இந்நிலையில் மேற்படி இடைநிலை எண் 5/2019 மனுவிற்கு எதிராகவே மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும் இவ்வழக்கில் சேர்த்தால் தான் அசல் வழக்கின் உண்மையை நிரூபிக்க வாய்ப்பு வழங்கவேண்டியது அவசியமானது என்பதாலும், இம்மனுவால் எதிர்மனுதாரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதை கருதியும் நீதியின்பாலும், நியாயத்தின்பாலும் இம்மனுவினை அனுமதித்து மேற்படி ஆவணங்களை கூடுதல் சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18–ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2025.12.18 19:08:13 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**

**மயிலாடுதுறை,**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

| வ.எண் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | 29.01.1993 | மனுதாரர் முத்துராமன் திருமண பத்திரிக்கை | சான்றிட்ட நகல் |
| 2. | 29.09.2004 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 3. | 15.02.2006 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 4. | 11.07.2009 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 5. | 03.10.2009 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 6. | 16.06.2019 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 7. | 21.06.2019 | மனுதாரர் கொள்முதல் ரசீது | சான்றிட்ட நகல் |
| 8. | | அ.வ.எண்.305/2017 பிராது அலுவலக நகல் | சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2025.12.18 19:08:21 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**

**மயிலாடுதுறை,**

*நேரிய /வரைவு உத்தரவு*
*I.A. 3/2024*
*in*
*R.C.A. 3/2022*
*நாள் :– 18.12.2025.*